# 07. 09. 2025

## தலைப்பு செய்திகள்

1. சரக்கு சேவை வரி சீர்சிருத்த பலன்கள் மக்களை சென்றடைவது உறுதி செய்யப்படும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

2. ஆரோக்கிய இந்தியாவிற்கான மிதிவண்டி இயக்கம் மக்கள் இயக்கமாக மாறியுள்ளது என்று மத்திய அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா கூறியுள்ளார்.

3. தமிழகத்தின் வளர்ச்சிக்கு இங்கிலாந்து வாழ் தமிழர்கள் பெரும் பங்காற்றுவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

4. இந்தாண்டின் முழு சந்திரகிரகணம் இன்றிரவு நிகழ்கிறது.

5. ஆசிய கோப்பை ஆடவர் ஹாக்கி இறுதி போட்டியில் இந்தியா இன்று தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

## இனி விரிவான செய்திகள்

************

### நிர்மலா சீதாராமன்

சரக்கு சேவை வரி சீர்சிருத்த பலன்கள் மக்களை சென்றடைவது உறுதி செய்யப்படும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

ஊடகத்திற்கு அவர் அளித்த பேட்டியில் வரி குறைப்பு நடைமுறைகள் செயல்படுத்தப்படாதது கண்டறியப்பட்டால் பொதுமக்கள் புகார் அளிக்கலாம் என கூறியுள்ளார்.

பல்வேறு தொழில்துறை நிறுவனங்கள் வரி குறைப்பை உடனடியாக அமல்படுத்த ஒப்புக்கொண்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே சரக்கு சேவை வரி சீர்திருத்தங்கள் நாட்டின் ஊரக பகுதி தொழில்முனைவோர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் என மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக 10 கோடிக்கும் மேற்பட்ட கால்நடை வளர்ப்பு விவசாயிகள், பால் உற்பத்தியாளர்கள் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் தங்கள் வர்த்தகத்தை விரிவாக்க இது வகை செய்யும் என அமைச்சகம் கூறியுள்ளது.

மேலும் இந்த வரி குறைப்பு மருத்துவ துறைக்கு பெரிதும் பயனளிப்பதுடன் நாட்டின் சுகாதார துறை சேவைகளை ஏற்கதக்க விலையில் அனைவரும் பெற வகை செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

************

### சிவ்ராஜ்சிங் சவ்ஹான்

சரக்கு சேவை வரி சீர்திருத்தங்கள் வேளாண் துறையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் என மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் தெரிவித்துள்ளார்.

போபாலில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரிகுறைப்பால் சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் பெரிதும் பயனடைவதுடன் வேளாண் நடவடிக்கைகளுக்கான செலவினம் குறையும் என்றார்.

************

மாண்டவியா

மிதிவண்டி ஓட்டுதல், உடல் நலத்திற்கான சிறந்த பயிற்சி மட்டுமன்றி சுற்று சூழல் மாசுபாட்டை தவிர்ப்பதற்கான தீர்வாக அமைவதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஞாயிற்றுக்கிழமைகளில் சைக்கிள் ஓட்டுதல் நிகழ்ச்சியில் இன்று கலந்துகொண்ட அவர் ஆரோக்கியத்திற்கான இந்த முன்னெடுப்பு மக்கள் இயக்கமாக மாறி உள்ளதாக பெருமிதம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் ஞாயிற்றுக்கிழமைகளில் சைக்கிள் இயக்கம் தொடர்வதை சுட்டிக்காட்டினார்.

உள்ளூர் தயாரிப்புகளை ஊக்குவிப்போம் என்பதை வலியுறுத்தும் வகையில் டெல்லியில் இன்று நடைபெற்ற சைக்கிள் ஓட்டும் நிகழ்ச்சியில் 50க்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

இதனிடையே சைக்கிள் மீதான 18 சதவிகித சேவை வரியை 5 சதவிகிதமாக மத்திய அரசு குறைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

************

முதலமைச்சர்

தமிழகத்தில் தொழில் தொடங்க இங்கிலாந்து வாழ் தமிழர்கள் முன்வர வேண்டும் என முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.

ஜெர்மனி இங்கிலாந்து பயணத்தை முடித்துக்கொண்டு தாயகம் புறப்படும் முன் அவர் வெளியிட்ட அறிக்கையில் மாநிலத்தின் வளர்ச்சிக்கு இங்கிலாந்து வாழ் தமிழர்கள் குறிப்பிடத்தக்க பங்காற்றுவதாக கூறினார்.

சிறந்த உட்கட்டமைப்பு அமைதியான சூழலால் தமிழகத்தில் வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்து வருவதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவஅவர், தமது வெளிநாட்டு பயணம் மூலம் 15 ஆயிரம் கோடிக்கும் அதிகமான முதலீடுகள் ஈர்க்கப்பட்டு ஆயிரக்கான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றார்.

சிறந்த உட்கட்டமைப்பு, அமைதியான சூழல், உள்ளிட்டவற்றால் தமிழகத்திற்கான முதலீடுகள் அதிகரித்து வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

************

உதயநிதி

தமிழகத்தில் வரும் சட்டப்பேரவை தேர்தலில் 200-க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றிபெற்று திமுக ஆட்சி அமைக்கும் என துணை முதலமைச்சர் திரு.உதய நிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், 11.19 சதவிகித பொருளாதார வளர்ச்சியுடன் நாட்டிலேயே தமிழகம் முதல் இடத்தில் உள்ளதாக கூறினார்.

மகளிர், சிறுபான்மை இன மக்களின் முன்னேற்றம், காலை உணவு திட்டம் உள்ளிட்ட தமிழக அரசின் மக்கள் நல திட்டங்களை பிற மாநிலங்களும் பின்பற்றுவதை அவர் சுட்டிக்காட்டினார்.

************

**சந்திரகிரகணம்**

இந்தாண்டின் முழு சந்திரகிரகணம் இன்றிரவு நிகழ்கிறது.

சூரியனுக்கும் - சந்திரனுக்கும் இடையில் பூமி ஒரே நேர்கோட்டில் வரும் இந்த அரிய நிகழ்வு இரவு மணி 8.58க்கு தொடங்கி நாளை அதிகாலை 2.25 வரை நீடிக்கிறது.

டெல்லி, மும்பை, கொல்கத்தா, பெங்களூரு, சென்னை உள்ளிட்ட பல்வேறு நகரங்களிலும்,

ஆஸ்திரேலியா, கிழக்கு ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் முழு கிரகணத்தை வெறும் கண்களால் காணமுடியும்.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் அப்சர்வேட்ரி பகுதியில் சந்திர கிரகணத்தை பார்ப்பதற்கான சிறப்பு வான்நோக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வான் இயற்பியல் ஆய்வகத்தில் ஆராய்ச்சியாளர் கிறிஸ்பின் கார்த்திக் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

இதேபோல் திருச்சி அண்ணா அறிவியல் மைய கோளரங்கில் மாலை 6 மணி முதல் சிறப்பு வான் நோக்கு நிகழ்விற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சந்திரகிரகணத்தை ஒட்டி திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில், மதுரை, ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம் உள்ளிட்ட இடங்களில் திருக்கோவில்களில் இன்றுமாலை முதல் நாளை காலை வரை கோவில் நடை சார்த்தப்படும்.

************

**நேரு – அன்பில்**

தமிழக அரசின் பல்வேறு திட்டங்களால் பள்ளி கல்வி துறை வெற்றிகரமாக செயல்படுவதாக மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

10, 12ஆம் வகுப்பில் 100 சதவிகித தேர்ச்சி பெற்ற மாணாக்கர் மற்றும் ஆசிரியர்களுக்கு திருச்சியில் இன்று நடைபெற்ற பாராட்டு விழாவில் பேசிய அவர், அரசின் திட்டங்களை செயல்படுத்துவதில் ஆசிரியர்கள் பெரும் பங்காற்றுவதாக கூறினார்.

தமிழ் மொழி மீதான ஈர்ப்பு மாணவர்களுக்கு அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டிய அமைச்சர் பொதுத்தேர்வில் தமிழ் பாடத்தில் 100க்கு 100 மதிப்பெண்கள் பெற்ற 142 மாணாக்கருக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு ஆசிரியர் பணியை ஊக்கப்படுத்தும் வகையில் அரசு இத்தகைய நிகழ்ச்சிகளை நடத்துவதாக கூறினார்.

திருச்சி பஞ்சப்பூர் பேருந்து நிலையம் அருகே விரைவில் அரசு நிகழ்ச்சிகளுக்கான மிகப்பெரிய அரங்கம் அமைக்கப்படும் என்று கூறிய அமைச்சர் கல்வியில் சிறந்து விளங்கிய மாணாக்கருக்கு பாராட்டு தெரிவித்தார்.

ஆட்சித்தலைவர் திரு.சரவணன், பள்ளிகல்வித்துறை உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

************

**சுப்பிரமணியன்**

தமிழகத்தில் கடைகோடி மக்களுக்கும் மருத்துவ சேவை கிடைப்பதை அரசு உறுதி செய்வதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டம் தொண்டியில் அரசின் மக்கள் நலன் காக்கும் மருத்துவ திட்ட முகாமை தொடங்கிவைத்து பேசிய அவர் மாநிலத்தில் இதுவரை நடைபெற்ற 55 முகாம்கள் மூலம் 2 லட்சத்திற்கும் அதிகமானோர் பயனடைந்ததாக கூறினார்.

************

**மனோன்மணியம்**

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகத்தின் 35ஆவது நிறுவன நாள் இன்று கொண்டாடப்பட்டது.

பல்கலைகழக துணைவேந்தர் டாக்டர் என்.சந்திரசேகர் தலைமையில் மாணாக்கர் ஆசிரியர்கள் உள்ளிட்டோர் பங்கேற்ற இந்நிகழ்ச்சியில் கல்வி ஆராய்ச்சி சமூக முன்னேற்றம் மற்றும் பிராந்திய வளர்ச்சியில் தொடர்ந்து முன்னனிலை வகிக்க உறுதிமொழி ஏற்கப்பட்டது.

************

**இருவரி**

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் 10 உழவர் நல சேவை** மையங்கள் அமைக்கப்பட உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

வேளாண் பட்டம் மற்றும் பட்டயபடிப்பு முடித்தவர்கள் இணையதளம் மூலம் விண்ணப்பித்து இதற்கான கடனுதவி பெறலாம்.

**அரியலூர் அரசு மருத்துவ கல்லூரியில் சுகாதாரம்** சார்ந்த ஓராண்டு சான்றிதழ் படிப்புகளில் சேர்வதற்கான விண்ணப்பங்களை வரும் 15ஆம்

தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

**சிவகங்கை மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில்** 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஆயிரத்து 500 மாணாக்கருக்கு கல்வி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி பொற்கொடி தெரிவித்துள்ளார்.

**உலக பிசியோதெரபி தினத்தை ஒட்டி வேலூரில்** இன்று நடைபெற்ற விழிப்புணர்வு மாரத்தான் போட்டியில் 200க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

************

**விவசாயி**

விருதுநகர் மாவட்டத்தில் கொல்கத்தாவை சேர்ந்த விவசாய தொழிலாளர்களின் நெல் நடவு முறைகளால், குறைந்த செலவில் அதிக மகசூல் கிடைப்பதாக விவசாயி தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

************

**நாகை**

நாகை வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய மாதா பேராலய ஆண்டு திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேர் பவனி இன்று இரவு நடைபெறுகிறது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

************

**ஒகேனக்கல்**

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து குறைந்ததை அடுத்து இன்றுமுதல் பரிசல் இயக்க மாவட்ட நிர்வாகம் அனுமதி வழங்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 120 அடியாக தொடரும் நிலையில் அணைக்கு வரும் 23 ஆயிரம் கன அடி நீர் முழுவதும் வெளியேற்றப்படுகிறது.

************

**வானிலை**

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக மயிலாடுதுறை நாகை திருவாரூர் தஞ்சாவூர் புதுக்கோட்டை செங்கல்பட்டு விழுப்புரம் கடலூர் ராமநாதபுரம் சிவகங்கை அரியலூர் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

************

**ஹாக்கி**

பீஹார் ராஜ்கிரில் நடைபெறும் ஆசிய கோப்பை ஆடவர் ஹாக்கி இறுதி போட்டியில் இன்று இந்தியா – நடப்பு சேம்பியன் தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

இதுவரை 3 முறை இந்திய ஆடவர் அணி ஆசிய கோப்பையை வென்றுள்ள நிலையில் இன்றைய போட்டி ஹாக்கி ரசிகர்களிடையே ஆவலை ஏற்படுத்தியுள்ளது.

இப்போட்டியில் இந்தியா வெற்றிபெற்றால் நெதர்லான்ஸில் நடைபெற உள்ள உலக கோப்பை ஹாக்கி போட்டியில் பங்கேற்க தகுதிபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

************

**டென்னிஸ்**

யு.எஸ்.ஓப்பன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் இறுதி போட்டியில் இன்று இத்தாலியின் Jannik Sinner - ஸ்பெய்னின் **Carlos Alcaraz-**ஐ எதிர்கொள்கிறார்.

மகளிர் ஒற்றையர் சேம்பியன் பட்டத்தை பெலாரசின் சபலென்கா கைப்பற்றியுள்ளார்.

நள்ளிரவு நடைபெற்ற இறுதியாட்டத்தில் அமெரிக்காவின் அனிசிமோவா-வை 6-3 7-6 என்ற நேர் செட்களில் அவர் வென்றார்.

************

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**